# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1937/3 - 2015 ඔක්තෝබර් මස 19 වැනි සඳුදා - 2015.10.19

*1937/3 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)

**2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்கச் (திருத்த) சட்டத்தின் “உ” அட்டவணையின் 10 ஆம் உறுப்புரையின் கீழான கட்டளை**

2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்கச் (திருத்த) சட்டத்தின் ‘‘உ’’ அட்டவணையின் 10 ஆம் உறுப்புரையின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2015, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 1933/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினை கீழ் வருமாறு திருத்துவதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

(1) 2015, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 1933/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரகடனப்படுத்தப்பட்ட கட்டளையானது, 2015, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறுதல் வேண்டுமென்பதுடன், அது மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் அமுலில் இருத்தல் வேண்டும்.

(2) 2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்கச் (திருத்தச்) சட்டத்தின் “உ” அட்டவணையின் 10 ஆம் உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்ட 2015, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதிய 1901/3 ஆம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தலானது, 2015, ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது. எவ்வாறாயினும், 2015, ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ தாபிக்கப்பட்டு பின்னர் திருத்தப்படாத, கடன் கடிதத்தினை (கடிதங்களை) அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் சுங்கப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்காக 2015, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதிய 1901/ 3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் பயன்வலுப் பெறுதல் மற்றும் ஏற்புடையதாதல் வேண்டுமெனவும் கருதப்படுதல் வேண்டும்.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2015, ஒற்றோபர் 19.

*11- 69*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.